செய்தி வெளியீடு எண்: 209 நாள்: 05.03.2019

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களால் 2018-2019 ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையில் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான பிரதம மந்திரி ஓய்வூதிய திட்டம் (Pradhan Mantri Shram – Yogi Manndhan) அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் சாலையோர வியாபாரிகள், கை ரிக்ஷா இழுப்பவர்கள், கட்டடத் தொழிலாளர்கள், வீட்டு பணியாளர்கள், விவசாய தொழிலாளர்கள், பீடி தொழிலாளர்கள், கைத்தறி தொழிலாளர்கள், தோல் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் உள்ளிட்ட 150 அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள 60 வயது பூர்த்தி செய்த தொழிலாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.3,000/- வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேரும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 18 வயதாகவும், அதிகபட்சம் 40 வயதாகவும் இருக்க வேண்டும். மாத வருமானம் ரூ. 15,000/- அல்லது அதற்கு கீழே இருக்க வேண்டும். அமைப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருப்போர், EPF/ESIC/NPS-ல் உறுப்பினர்களாக உள்ளவர்கள், வருமாவரி கட்டடுபவர்கள் இத்திட்டத்தில் சேர முடியாது. மேலும், இத்திட்டத்தில் சேர்வதற்கு குறைந்தபட்ச மாதாந்திர சந்தா தொகையாக ரூ.55/-ம் அதிகபட்சமாக ரூ.200/ம் செலுத்த வேண்டும் இந்த ஓய்வூதிய திட்ட ஆயுள் காப்பிட்டு கழகம் மூலம செயல்படுத்தப்படும்.

மேற்படி ஓய்வூதிய திட்டத்தில் சேரும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் ஆதார் அட்டை, கைப்பேசி மற்றும் சேமிப்பு வங்கி கணக்கு/ஜன்தன் வங்கி கணக்கு (With IFSC Code) ஆகியவற்றை கட்டாயம் வைத்திருக்க வேண்டும்.

தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மாவின் அரசு, மத்திய அரசு அறிவித்துள்ள மேற்படி ஓய்வூதிய திட்டத்தின் பயனை தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்று (05.03.2019) சென்னை அம்மா மாளிகையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அமைப்பு சாரா

தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தினை துவக்கி வைத்து ஓய்வூதிய திட்ட அடையாள அட்டையை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் .திருமதி. நிலோபர் கபில் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். மேலும் இந்த விழாவில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர், மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் , மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பெஞ்ஜமின், மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர். விஜயகுமார், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. சுனில் பாலீவால், இ.ஆ.ப. தொழிலாளர் ஆணையர் முனைவர். இரா.நந்தகோபால், இ.ஆ.ப.கூடுதல் மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையர், திரு.சந்திரமௌலி சக்கரவர்த்தி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் செயலாளர் (பொறுப்பு) திரு.தி.குமரன், தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர்கள் நல வாரியத்தின் செயலாளர் திரு.தங்கவேல் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**